# சென்னை ராயபுரத்தில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்.

தியாகராய நகர், ஜூன் 9.

நேற்று மலை சென்னை ராயபுரத்திலுள்ள பனையாக் தொட்டியில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம் மாலை சென்னை நகராண்மைக் கழக அங்கத்தினர் தோழர் எ. சங்கரன் தலைமையில் நடந்தது. சுமார் 1400 ஜனங்கள் வந்திருந்தார்கள். பெண்கள் மிகுதியாக வந்திருந்தது குறிப்பிடத் தக்கது. அவ்வமயம் தோழர்களான எஸ். இ. ரங்கநாதம், அருணகிரி சுவாமிகள், சி. என். அண்ணாதுரை எம். எ., கே. எம். பாலசுப்பிரமணியம் பி. எ., பி. எல்., திருநாவுக்கரசு (வயது 12), இளங்கோவன் முதலியவர்கள் சாங்கோபாங்கமாய் ஹிந்தி எதிர்ப்பின் நோக்கத்தை எடுத்து மக்கள் மனதில் பதியும்படி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். விஜயம் செய்திருந்த பெண்கள் வீரர் ஸ்டாலினைக் கண்டு மனமுருகி கண்ணீர் விட்டு அழுதார்கள். கூட்டம் நடந்து கொண்டிருந்த போது இடை இடையே மழை தூர ஆரம்பித்தது. மகாத்மா ஸ்டாலின் வாழ்க! என்ற கோஷங்களைக் கூடியிருந்த மக்கள் சொன்னவுடன் மழை நின்று விட்டது. கடைசியாகத் தலைவர் முடிவுரையில் ஹிந்தி எதிர்ப்பு நோக்கத்தின் அவசியத்தையும் அதற்கு தமிழர் என்பவர்கள் செய்யவேண்டிய கடமைகளையும் விளக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துச்சொல்லி, ஹிந்தி எதிர்ப்புப் போரில் தன்னாலியன்ற உதவியைச் செய்வதாகவும் அதைப்போல் ராயபுர வாசிகளையும் செய்யும்படி கேட்டுக் கொண்டதோடு ஹிந்தி எதிர்ப்புப் போரில் தான் சிறை செல்லவும் தயார் என உறுதி கூறியதோடு எல்லோரையும் சிறைக்கு வரும்படி அறைகூவி அழைத்தார்.

சுதேசமித்திரனைத் தமிழர் ஆதரிக்கக் கூடாதென்ற அறிகுறியைக் காண்பிப்பதற்காக "சுதேசமித்திரன்" சுக்குநூறாக கிழித்தெறியப்பட்டது. 6-6-38-க் தேதி சிவஞானம் பார்க்கில் நடந்த ஹிந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் "தினமணி" என்ற செய்திப் பத்திரிகையை பொது மக்களுக்கு முன்பாக சுவாமி அருணகிரி அவர்களால் தீவைத்துக் கொளுத்தப்பட்டது.